

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.4.2025) தலைமைச் செயலகத்தில், பால்வளத்துறை சார்பில் 64 நபர்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பில் 166 நபர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 391 நபர்களுக்கும், என மொத்தம் 621 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 13 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.4.2025) மதுரையில், நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அண்மையில் அவரது தந்தை இரா. சுப்புராம் அவர்கள் மறைவெய்தியதையொட்டி, அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.

### விளிம்பு நிலை மக்களின், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த

# பொது விநியோகத் திட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி,ஏப்.5-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 02 ஏப்ரல்2025 அன்று மக்களவையில், விளிம்பு நிலை மக்களுக்கும், பயனாளிகளுக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப் படுத்தும் வகையில் பொது விநியோகத் திட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா? என்றும் பொது விநியோக திட்டத்திற்கான தானியங்கள் வெளிச் சந்தையில் விற்கப்படுவதை தடுக்க, ஒன்றிய அரசு ஏதேனும் முயற்சிகள் எடுத்துள்ளதா? என்றும், கடந்த மூன்று ஆண்டுகளில் ஒன்றிய அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது? என்றும் ஒன்றிய அரசின் பொது விநியோகத் துறை இணையமைச்சர், திருமதி ஜெயந்திபாய் பம்பானியா அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் பொது விநியோகத் துறை இணையமைச்சர், அவர்கள் அளித்த பதில் வருமாறு:

கணினி மூலம் செயல்படும், இணைய வழிச் செயலிகளின் உதவியுடன், பொது விநியோகத் திட்டத்திற்கான, தானியங்கள் பொதுச் சந்தையில் விற்கப்படுவதை தடுக்க, அனைத்து முயற்சி களையும் ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளது என்றும், இதன் மூலம் விளிப்புநிலை மக்களின், உணவுப் பாதுகாப்பு உறுதிப் படுத்தப் பட்டுள்ளது என்றும், பயனாளிகளின் ரேஷன் கார்டுகள் அனைத்தும் முறையாக கணினி மயமாக்கப் பட்டுள்ளன என்றும், 20 கோடி ரேஷன் கார்டுகள் மூலம் 80 கோடிக்கும் அதிகமான விளிம்பு நிலை மக்கள் பயனடைந்து வருவதை ஒன்றிய அரசு உறுதி செய்துள்ளது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், தேசிய உணவுப்பாதுகாப்பு திட்டம் 2013, முறையாக செயல்படும் வகையில், அனைத்து 31 மாநிலங்களில், கட்டணமில்லா தொலைபேசி எண்கள், பொதுமக்கள் குறை தீர்க்கும் முகாம்கள், விழிப்புணர்வு மையங்கள், கணிணி வழிச் செயலிகள் ஆகியவற்றின் மூலம் ஒன்றிய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும், ஆதார் அட்டைகள், ரேஷன் அட்டைகள் அனைத்தும் ஐந்து லட்சத்திற்கும் அதிகமாக செயல்பட்டு வரும் விற்பனை முனையத்துடன் இணைக்கபட்டிருப்பதால் பொது விநியோகத் திட்டத்தில் கசிவுகள் ஏதுமில்லாமல், முறையாக செயல்படுத்தப் பட்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் பொது விநியோகத் துறை இணையமைச்சர், திருமதி ஜெயந்திபாய் பம்பானியா அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

# சென்னை- தூத்துக்குடி இடையே ‘வந்தே பாரத்’ எக்ஸ்பிரஸ்!

## மக்களவையில் — கனிமொழி கருணாநிதி கோரிக்கை!



புதுடெல்லி, ஏப்.5-

தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னைக்கும், தென் தமிழ்நாட்டின் தொழில் நகரமான தூத்துக்குடிக்கும் இடையே பயணிகள் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில்... சென்னைக்கும், தூத்துக்குடிக்கும் இடையே வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட வேண்டும் என்று தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவரும், தூத்துக்குடி எம்.பி.யுமான கனிமொழி கருணாநிதி கோரிக்கை வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இது குறித்து, அவர் பேசியதாவது:-

“சென்னைக்கும் தூத்துக்குடிக்கும் இடையே அதிகரித்து வரும் பயணிகள் போக்குவரத்தினை எதிர்கொள்ள, தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் வழியாக பழைய ஜனதா எக்ஸ்பிரஸ் வழித்தடத்தில் புதிய எக்ஸ்பிரஸ் ரயிலை அறிமுகப்படுத்துவதன் மூலம், தற்போதுள்ள முத்துநகர் எக்ஸ்பிரஸில் கூட்ட நெரிசலைக் குறைப்பதற்கு ஒன்றிய அரசு திட்டம் வைத்துள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள், இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

தூத்துக்குடியிலிருந்து குருவாயூர் எக்ஸ்பிரஸ் மற்றும் நாகர்கோவில் எக்ஸ்பிரஸில் இணைப்பு ரயில்களை மீண்டும் இயக்க திட்டமுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்;

சென்னைக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?” என்று கேள்விகள் எழுப்பியிருந்தார் கனிமொழி கருணாநிதி.

இவற்றுக்கு ஒன்றிய ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதிலில்,

“சென்னை - தூத்துக்குடி இடையே தற்போது 12693/12694 சென்னை எழும்பூர் - தூத்துக்குடி பேர்ல் சிட்டி எக்ஸ்பிரஸ் தினசரி சேவை இயக்கப்படுகிறது. மேலும், பயணிகளின் வசதிக்காக, இணைப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

அதாவது. 56724/56723 வாஞ்சி மணியாச்சி - தூத்துக்குடி பயணிகள் ரயில் 16127/16128 சென்னை எழும்பூர் - குருவாயூர் எக்ஸ்பிரஸ் உடன் இணைக்கப்பட்டுள்ளது. அதேபோல, 56725/56726 தூத்துக்குடி - வாஞ்சி மணியாச்சி பயணிகள் ரயில் 22667/22668 நாகர்கோவில் - கோயம்புத்தூர் எக்ஸ்பிரஸ் உடன் இணைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர தூத்துக்குடிக்கு வந்தே பாரத் ரயில் உள்ளிட்ட புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துவது என்பது புதிய ரயில்களுக்கான போக்குவரத்து தேவை, செயல்பாட்டு சாத்தியக் கூறுகள், நிதி உள்ளிட்ட வளங்கள் கிடைக்கும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து ரயில்வேயின் செயல் திட்டத்தில் இடம்பெறும்” என்று பதிலளித்துள்ளார்.

### விலைப் பற்றாக்குறை செலுத்தும் திட்டத்தின்கீழ் பணம் பெற்ற

# மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் – சி.என்.அண்ணாமலை கேள்வி!



புதுடெல்லி, ஏப். 5-

விலை பற்றாக்குறை செலுத்தும் திட்டத்தின்கீழ் (பி.டி.பி.எஸ்.) பணம் பெற்ற மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று மக்களவையில் கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை: வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் விவசாயக் கல்யாண மந்திரியிடம் கேட்ட கேள்விகள் வருமாறு:-

(அ) விலை பற்றாக் குறை செலுத்தும் திட்டம் (PDPS) தொடங்கப்பட்டதிலிருந்து அதன் கீழ் பணம் பெற்ற மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை;

(ஆ) இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை மற்றும் தகுதியுள்ள விவசாயிகளுக்கு பணம் செலுத்துவதைச் செயல்படுத்தி வழங்குவதற்கு எடுக்கப்பட்ட சராசரி நேரம்;

(இ) PDPS செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் பொதுவான சவால்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்;

(ஈ) விவசாயிகளின் வருமானத்தை நிலைப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் PM-AASHA எந்த அளவிற்கு பங்களித்துள்ளது;

(இ) மாநிலங்கள் முழுவதும் PM-AASHA திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு வழிமுறைகள்;

(f) திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு அமைச்சகத்தால் நடத்தப்படும் மதிப்பாய்வுகளின் அதிர்வெண்;

(g) திட்டத்தின் வெற்றியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்; மற்றும்

(h) இந்த கண்காணிப்பு நடவடிக்கைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள்?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் கிருஷி ஏவன் கிசான் கல்யாண் மாநில மந்திரி (ஸ்ரீ ராம்நாத் தாகூர்) அளித்த பதில் வருமாறு:-

(அ) & (ஆ): விலை பற்றாக்குறை செலுத்தும் திட்டம் (PDPS), அறிவிக்கப்பட்ட சந்தையில் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கும் விற்பனை/ மாதிரி விலைக்கும் இடையிலான விலை வேறுபாட்டை மத்திய அரசு நேரடியாக MSP மதிப்பில் 15% வரை (2% நிர்வாக செலவு உட்பட) நேரடியாக செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வெளிப்படையான ஏல செயல்முறை மூலம் அறிவிக்கப்பட்ட சந்தை முற்றத்தில் எண்ணெய் வித்துக்களை நிர்ணயிக்கப்பட்ட நியாயமான சராசரி தரத்திற்கு (FAQ) விற்பனை செய்யும் முன் பதிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு இது பொருந்தும். இருப்பினும், குறிப்பிட்ட ஆண்டு/பருவத்திற்கான குறிப்பிட்ட எண்ணெய் வித்துக்களுக்கு விலை ஆதரவு திட்டம் (PSS) அல்லது PDPS ஐ செயல்படுத்த மாநிலங்கள்/யூனியன்பிரதேசங்கள் விருப்பம் கொண்டுள்ளன. எந்தவொரு மாநிலமும் 40% க்கும் அதிகமான அளவுகளை ஈடுகட்ட விரும்பினால், அவர்கள் அதன் வளங்களிலிருந்து அவ்வாறு செய்யலாம்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### “கால்நடை பராமரிப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தால்

# தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன?”

## மாநிலங்களவையில் – எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி, ஏப். 5-

“தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எந்த மாவட்டங்களில் எத்தனை திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன? ஒதுக்கப்பட்ட நிதி விபரங்கள் என்ன? இத் திட்டத்தின் பயனாளிகள் யார்? மூலம் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புகள் மற்றும் கால்நடை வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டுள்ளது?” என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய கால்நடை வளர்ப்புத்துறை இணையமைமைச்சர் எஸ்.பி. சிங் பகேல் அவர்கள்,

“தமிழ்நாட்டில் 31 திட்டங்களுக்கு ரூ.2047.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ரூ.1409.58 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது” என்றும் “தமிழ்நாட்டில் 14 கால்நடை தீவண தொழிற்சாலைகள், 6 இனப்பெருக்க தொழில்நுட்ப திட்டங்கள், 9 பால் பதப்படுத்தல் மற்றும் மதிப்பூட்டல் திட்டங்கள், 2 இறைச்சி பதப்படுத்தல் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், சேலம், திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்கள் பயனடைந்துள்ளன. கால்நடை பராமரிப்பு உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் மூலம் தமிழ்நாட்டில் நேரடியாக 4,595 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், 3.78 லட்சம் பேர் மறைமுகமாக பயனடைந்துள்ளனர்.

மேலும், 24.34 லட்சம் லிட்டர் பால் தினசரி உற்பத்தி செய்யப்படும் அளவிற்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கால்நடை தீவன உற்பத்தி ஆண்டுக்கு 12.76 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இறைச்சி பதப்படுத்தல் திறன் ஆண்டுக்கு 39,718 மெட்ரிக் டன் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 3.32 கோடி பறவைகள் மற்றும் 126.99 கோடி முட்டைகள் கூடுதல் அளவில் சந்தைப்படுத்தப்பட உள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் நிதி சமமாக விநியோகிக்கவும், சிறு மற்றும் குறு நிறுவனங்கள், விவசாயிகள் கூட்டுறவுகள், தனியார் நிறுவனங்கள், விவசாயிகள் தயாரிப்பு அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து பிரிவினருக்கும் இந்த திட்டத்தின் கீழ் நிதி கிடைக்க உறுதி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.




தி.மு.க.

இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்

புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–4 க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு மற்றும் நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக அறிவிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.04.2025 திங்கட்கிழமை | மாலை 4.00 மணி | தருமபுரி கிழக்கு | கே.ஜே.பிளாசா, சேலம் பிரதான சாலை, தருமபுரி. |
| 08.04.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | தருமபுரி மேற்கு | என்.என்.மஹால், சேலம் புறவழிச் சாலை, அரூர், தருமபுரி. |
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 03-04-2025

